**O.S.No.25/2024**

வா.சா.1, திரு.பவுல்ராஜ்
நாள் : 13.10.2025 நேரம் : 11.58 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)எனது தகப்பனார் பெயர் பொன்னையா. எனது தாயார் பெயர் மார்த்தாள். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர். 1.அருள்மணி, 2.புஷ்பம், 3.அமிர்தம், 4.ஜெயசீலன் ஆவார்கள். ஜெயசீலன் என்பவர் இந்த வழக்கின் பிரதிவாதி என்றால் சரிதான். எனது தாயார் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர். 1.வேதநாயகம், 2.முத்துமணி, 3.முத்திருளி ஆவார்கள். முத்துமணி என்பவர் கணவர் பெயர் கருப்பையா என்றால் சரிதான். மேற்படி கருப்பையாவின் மகன் மாதவன் என்றால் சரிதான். கருப்பையா மற்றும் மாதவனிடமிருந்து தான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. கிரையம் பெற்றுள்ளேன்.

2)தாவா சொத்து கருப்பையாவிற்கு எவ்வாறு பாத்தியம் என எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. கருப்பையா மற்றும் மாதவனிடம் நான் கிரையம் பெற்றதாக நான் கூறுவதற்கு என் கைவசம் பத்திரங்கள் இல்லை என்றால் சரியல்ல, மொத்தம் 1 ஏக்கர் 20 சென்ட் கிரையம் பெற்றேன். அதில் 60 சென்டிற்கு பத்திரம் போடப்பட்டுள்ளது. மீதமுள்ள 60 சென்டிற்கு பத்திரம் போடவில்லை. ஆனால் கிரைய தொகையை செலுத்திவிட்டேன். அபிராமம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திர எண்.98/1996 அதற்கு தாய் பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

3)தாவா சொத்து கருப்பையா வகையறாவிற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. 12.11.1943 ம் தேதியில் தாவா சொத்துகள் அனைத்தும் எனது தகப்பனார் பொன்னையா பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. எனது

தகப்பனாருக்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தம் கிடையாது. கருப்பையா எனது சொந்த பெரியப்பா என்றால் சரியல்ல, எனது மனைவியின் தாய்மாமன் ஆவார். தாவா சொத்து கருப்பையாவிற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும், எனது தாயாரின் உடன்பிறந்த சகோதரியின் கணவர் என்பதால் எனது தகப்பனார் உழவடை செய்ய சொல்லி அனுமதி அளித்தார் என்றால் சரியல்ல.

4)யூடிஆர் காலத்தில் பட்டா தவறாக கருப்பையா பெயரில் ஏற்பட்டதன் அடிப்படையில் கருப்பையா உரிமை கொண்டாடுகிறார் என்றால் சரியல்ல. 10.08.1998 ம் தேதியில் தாவா சொத்துகள் இரண்டாக பிரிக்கப்பட்டு ஒரு பகுதியை எனது தாயார் மார்த்தாள் பெயரிலும், இன்னொரு பகுதியை எனது பெயரிலும் பதிவு செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 10.08.1988 ல் பிரதிவாதிக்கு 17 வயது என்பதால் தான் பிரதிவாதி பெயரில் பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் எப்போது இறந்தார் என எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் 1914 ல் காலமானார், எனது தாயாரின் இறப்பு சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5)நான் எனது தாயாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதர, சகோதரிகளுக்குள் பாகம் பிரித்து கொண்டதாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியல்ல. எனது சகோதரிகள் தாவா சொத்து எனக்கு கிரைய பாத்தியம் என்பதால் சொத்தில் பங்கு தேவையில்லை என்று ஒதுங்கிவிட்டார்கள். தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 119/5 ஏ, 119/5 பி பிரதிவாதிக்கு 12 சென்ட் தான் பாத்தியப்பட்டது என்று நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. 05.09.2024 ம் தேதியில் பிரதிவாதி தாவா சொத்தில் எனது அனுபவத்தை இடையூறு செய்கிறார் என்று நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல.

6)12.11.1944 லிருந்து தாவா சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் தான் பட்டா தாக்கலாகி வருகிறது என்றால் சரியல்ல. கருப்பையாவும், மாதவனும் தாவா

சொத்தில் விவசாயம் மட்டும் தான் பார்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தவறுதலாக தனது பெயரில் பட்டா ஏற்பட்டதன் அடிப்படையில் எனக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், ஜெசீலனும் 09.03.2022 ம் தேதியில் அழகர்சாமி என்னும் நோட்டரி வழக்கறிஞரின் முன்பாக உறுதிமொழி பத்திரம் எழுதி கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி உறுதி மொழி பத்திரத்தில் சர்வே எண். 119/5 ஏ, 119/5 பி என பிரித்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7)1996 ம் வருடம் கருப்பையா எனக்கு தாவா சொத்தை பொறுத்து பத்திரம் பதிவு செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நானும், எனது தம்பியும் சர்வே எண். 119/5 ஏ, 119/5 பி என பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. சர்வே எண். 119/5 ஏ, 119/5 பி க்கு பட்டா எண். 6671, 6486 க்களை பரமக்குடி RDO நீதிமன்றத்தில் ரத்து செய்ய சொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் சர்வே எண். 119/5 ல் உள்ள 1 ஏக்கர் 20 சென்டிற்கு எனது பெயரில் எனது பாகமான 60 சென்டிற்கு பட்டா வழுங்கப்பட்டுள்ளது. மேற்படி பரமக்குடி RDO நீதிமன்றத்தில் ஏற்பட்ட உத்தரவுக்கு எதிராக பிரதிவாதி மேல்முறையீடு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8)நான் மனுவில் சொல்லியுள்ள விசயங்கள் தவறு என்றால் சரியல்ல. நான் சரியான ஆவணத்தை காட்டவில்லை என்பதால் தான் பிரதிவாதிக்கு எதிராக உத்தரவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்பதை மறைத்து எனது சின்னம்மாவின் கணவரான கருப்பையா மற்றும் அவரது மகன் மாதவன் எனக்கு கிரையம் கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளில் பிரதிவாதிக்கு சரிபாதி பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.35 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.10.13 11:31:13 +0530